பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 28 புதன்கிழமை 14.12.2022 கதிர் 39

இது ரகசியம் அல்ல!

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினையில் பதிவுகள் மற்றும் விசாரணை விடயங்களை கையாள்வதற்கு செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் (ICRC யின்) பங்களிப்பைப் பெற தீர்மானிக்கப்பட்டு இருப்பதாக வெளியாகி உள்ள செய்தியை,
2

# காணாமல்போனோர் விவகாரத்தை செஞ். சர்வதேசக் குழு கையாளும்!

## அதனை அழைப்பதற்கு அரசு முடிவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசம்பர் 14

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இழுபடும் நிலையில், பாதிக்கப்பட்டவர்களுடன் நடுநிலைத் தரப்பாக நேரடியாக ஊடாடி விடயங்களைக் கையாள்வதற்கென செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் (International Committee of the Red Cross - ICRC) சேவையைப் பெறுவதற்கு அரசின் உயர்மட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருப்பதாக அறியவருகின்றது.
2

COMITE INTERNATIONAL GENEVE
ICRC

## இலங்கைக்குக் கடத்த முற்பட்ட
## 3,000 கிலோ பீடி இலை நடுக்கடலில் சிக்கியது!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.15

இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 3 ஆயிரம் கிலோ பீடி இலை இந்திய
2

## 20 மூடை கடல் அட்டை வேதாளையில் சிக்கியது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.15

இலங்கைக்கு கடத்தும் நோக்கில் படகில் ஏற்றப்பட்ட 20 மூடை கடல் அட்டை
2

## மின்சாரம் தாக்கி இளைஞன் சாவு

முல்லைத்தீவு - விசுவமடு பகுதியில் இரும்பு ஒட்டும் கடையில் மின்சாரம் தாக்கியதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். மூங்கிலாறு வடக்கு உடையார்கட்டுப் பகுதியில் வசித்துவரும் 17 வயதுடைய இளைஞன், குடும்ப கஷ்டம் காரணமாக விசுவமடு 10 ஆம் கட்டைப் பகுதியில் உள்ள
10



## பேசச் சென்றமை பச்சைத்துரோகம்!

### கஜேந்திரகுமார் காட்டம்

இலங்கை அரசாங்கம், பொருளாதார நெருக்கடிக்குள் இருக்கின்ற இந்த தருணத்தில், பேரம் பேசக்கூடிய வாய்ப்புக்கள் நிறையவே இருந்தும், எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாமல் தமிழ்த் தலைமைகள் பேச்சுக்குச் சென்றமை இனத்துக்கும் தியாகங்களுக்கும் செய்த
2

## அரசின் தீர்வு முயற்சி; பைத்தியக்காரத்தனம்

### உதயகம்மன்பில விமரிசனம்



நாட்டில் உள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வினை காண்பதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் முயற்சி பைத்தியக்காரத்தனம் என நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில தெரிவித்தார். 65 வருடங்களாக தீர்க்க முடியாத இனப்
10

## முல்லையில் காணி அபகரிப்புக்கு அளவீடு இரகசியமான முறையில்!




முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள ‘கோட்டாபய கடற்படை கப்பல்’கடற்படை முகாமுக்காக 617 ஏக்கர் காணிகளை சுவீகரிக்கும்
10

## நியதிச் சட்டம் ஆக்கிய ஆளுநருக்கு எதிராக சிவஞானம் வழக்குத் தாக்கல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.15

தம்பாட்டில் நியதிச் சட்டங்களை ஆக்கி வர்த்தமானியில் பிரசுரித்த வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜவின் நடவடிக்கைகு எதிராக வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் உயர் நீதிமன்றத்தில் தடைகேள் ஆணை மனு வழக்கு ஒன்றை நேற்றுத் தாக்கல் செய்துள்ளார.

வடக்கு மாகாண சபை இல்லாத காலத்தில் சட்ட வரம்பை மீறிய செயலாக ஆளுநர் தன்னிச்சையாக வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் செல்லுபடியற்றது என உத்தரவிடக் கோரியே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் மேன் முறையீட்டு நீதிமன்றில்
10





## வடக்கு ஆளுநரின் அலுவலகம் முன் ஆசிரியர் சங்கம் கவனவீர்ப்புப் போர்



வட மாகாண கல்வி அமைச்சினுடைய நிர்வாக சீர்கேடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வட மாகாண ஆளுநர் செயலகம்
10

## ஒற்றையாட்சிக்குள்தான் எந்தத் தீர்வும் 13 பிளஸ் அதுவே என்கின்றார் பஸில்!

13 பிளஸ் யோசனையால் இலங்கையின் ஒற்றையாட்சிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

எல்லைமீறிய அதிகாரப் பகிர்வை எதிர்ப்பீர்களா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பஸில் ராஜபக்ஷ இவ்வாறு கூறினார்.

“சமஷ்டி அடிப்படையிலான தீர்வு குறித்து
10



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் தரப்பு மிகக் கவனமாகக் கையாள வேண்டும். விரிவான, திறந்த நோக்கில் இதன் சாதக பாதகங்களை சட்ட விற்பன்னர்கள் மட்டத்தில் ஆராய வேண்டும்.

சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடுநிலைத் தரப்புத்தானே என்றோ –

முன்னர் யுத்த காலத்தில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை தரும் விதத்தில் செயல்பட்ட தரப்புத்தானே என்றோ –

கருதிக்கொண்டு 'எடுத்தோம், கவிழ்த்தோம்' என இவ்விடயத்தில் ஒரு முடிவுக்கு நாம் வந்து விடக்கூடாது.

இத்தகைய விடயங்களில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு உள்ள செயல் ஆணைத் தகுதி (Mandate) யாது என்பதை விரிவாக ஆராய்ந்துதான் இந்த முயற்சியை வரவேற்கும் அல்லது புறக்கணிக்கும் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்.

காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தைக் கையாள்வதற்கு இதற்கான விசேட சட்டம் ஒன்றின் மூலம் 'காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம்' ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் அதற்குத் தமிழ் மக்கள் – குறிப்பாக, காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் – கடும் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர்.

அதற்கான பிரதான காரணம் யாது அல்லது என்ன என்பதை நாம் முதலில் கண்டறிய வேண்டும்.

காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்குரிய சட்டத்தின் படி, அந்த அலுவலகத்தால் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் கண்டுபிடிக்கப்படும் தகவல்களை ஆதாரமாக வைத்து, எவருக்கு எதிராகவும் சிவில் அல்லது என்ன கிரிமினல் வழக்குகள் தொடரப்பட முடியாது. அது அந்தச் சட்டத்தில் உள்ளது. அதனால்தான் அந்த அலுவலகமே லாயக்கற்றது எனத் தமிழ் மக்கள் அதற்கு எதிராக – அந்த அலுவலகம் செயற்படுவதற்கு எதிராக – போராடி வருகின்றனர்.

ஆனால் அந்தச் சட்டத்தில் அப்படி கிரிமினல், சிவில் வழக்குகள் தொடுக்கப்பட முடியாது என்று குறிப்பிடப்பட்டமைக்குக் காரணம் உண்டு. அது இந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் சம்பந்தப்படும் விவகாரமும் கூட.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் காணாமலாக்கப்பட்டோரின் விவரங்களை தனது அலுவலகம் மற்றும் பிரதிநிதிகள் மூலம் ICRC பதிந்து இருக்கின்றது.

இப்படி காணாமலாக்கப்பட்ட 18 ஆயிரம் பேரின் முழு விவரங்களும் ICRC யிடம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அதில், 13 ஆயிரம் பேரின் விடயங்களில், உறவுகள் தமது பெயர், விவரங்களையும் தந்து, தமது உறவினர்கள் காணாமலாக்கப்பட்டமையை சர்வதேச மட்டத்தில் முன்வந்து உறுதி அளித்து சான்றுரைக்கத் தயார் என்ற படிவங்களையும் தாங்கள் பெற்றுப் பதிந்து வைத்திருக்கின்றனர் என ICRC வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால் தங்களது செயற்பாட்டு ஆணையின்படி (Mandate), இத்தகைய விடயங்களில் தங்களது பதிவுகள் சிவில் அல்லது கிரிமினல் வழக்கு விசாரணைகளுக்குப் பயன்படுத்தப்படும் சாத்தியம் இருக்குமானால் அவற்றை – அந்தப் பதிவுகளை – தாங்கள் வெளியிட முடியாது என்று குறிப்பிட்டு, தமது செயற்பாட்டு ஆணையையும் அவை சுட்டிக் காட்டியுள்ளன.

இத்தகைய ICRC யின் சட்ட விதிகள், ஆணைகள் காரணமாக அந்த 18 ஆயிரம் பேரின் பதிவுகளையும் அதனிடமிருந்து பெற்றுக் கொள்ளும் இலக்கோடுதான் இலங்கையில் உருவாக்கப்பட்ட காணாமலாக்கப்பட்டோர் அலுவலகச் சட்டத்தில் அதே விடயம் – சிவில் அல்லது கிரிமினல் வழக்கு விசாரணைகளுக்குப் பயன்படுத்தப்படுத்த முடியாது என்ற அம்சம் – குறிப்பிடப்பட்டது.

திரும்பவும் இந்த விடயத்தில் ICRC யைச் சேர்ப்பதன் மூலம் அது போன்ற தடையை நமக்கு நாமே விதிக்க இடமளிப்பதா என்பதை நாம் இப்போது சிந்திக்க வேண்டும். அதற்குரிய நிலைமை – சந்தர்ப்பம் – இதுதான்...!

- மின்னல் -

## காணாமல்போனோர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணியை மீண்டும் இலங்கையில் விஸ்தரிப்பதற்கான பச்சைக் கொடியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காண்பித்துள்ளார்.

இலங்கையில் காணாமல்போனோர் விவகாரம் பெரும் பூதாகாரமாகவே இருக்கும் நிலையில், அதனை சர்வதேச ஒத்துழைப்புடன் மட்டுமே ஒரு தீர்வை நோக்கி முன்கொண்டு செல்ல முடியும் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றனர்.

இதேநேரம் இந்த விடயம் ஐ.நா. மனிதஉரிமைப்பேரவை அமர்வுகளிலும் தொடர்ச்சியாக முன் வைக்கப்படும் பாரிய மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டாக இருப்பதோடு, தற்போது ரணில் அரசுடனான பேச்சுகளின் போது தமிழ்க் கட்சிகள் மிகவும் இறுக்கமான விடயமாக அதனை முன்கொண்டு செல்வார்கள் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.

இவற்றின் காரணமாக இலங்கையில் போர் இடம்பெற்ற காலத்தில் போர்முனையில் செயல்பட்ட நடுநிலைத் தொண்டு நிறுவனங்களில் ஒன்றான செஞ்சிலுவைச்சர்வதேசக் குழுவை இலங்கையில் அதன் செயல்பாடுகளை மீளவும் விரிவுபடுத்த அனுமதி வழங்கி, அதன் மூலம் காணாமல்போனோர் பதிவை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிகின்றது. இதற்கான பூர்வாங்க பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

## 3,000 கிலோ பீடி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரையோர காவல் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

தமிழகத்தின் தூத்துக்குடியில் இருந்து ஓர் வத்தையில் 3 ஆயிரம் கிலோ பீடி இலையைக் கடத்தும்போதே அது பிடிபட்டுள்ளது.

படகில் இருந்த ஆறுபேரும் இந்தியக் கரையோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சான்று பொருள்களுடன் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

## 20 மூடை கடல் அட்டை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகம் வேதாளையில் கியூப் பிரிவு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு பொலிஸார் சென்ற சமயம் கடத்தல்காரர்கள் தப்பி ஓடியுள்ளனர்.

இதனையடுத்து கடல் அட்டையையும் படகையும் கியூப் பிரிவு பொலிஸார் கைப்பற்றி சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

## பேசச் சென்றமை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பச்சைத்துரோகம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

"பேச்சுவார்த்தைக்கு போவதற்கு முன்னால் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு போலி நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு சமஷ்டியைத்தான் கேட்கப்போகின்றோம், அதை ஏற்காவிட்டால் வெளியேறுவோம் என்று விம்பத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்திவிட்டு, பேச்சுவார்த்தையில் சமஷ்டி தொடர்பில் அவர்கள் வாயே திறக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

தேசத்தின்குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களுடைய நினைவேந்தல், கட்சியின் தலைமைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றபோதே அவர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அரசாங்கம், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஓர் அழைப்பு விடுத்திருக்கின்ற இந்த நேரத்திலே விடுதலைப் புலிகள் இயக்கம் யுத்தம் மௌனிக்கப்படாமல் ஓர் இயங்கு நிலையில் இருந்திருந்தால் எங்களுடைய தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் ஐயாவும் தமிழ்ச்செல்வம் அண்ணனும் அந்த முழுப்பொறுப்பையும் ஏற்று ஒட்டுமொத்த தேசத்துக்காக இந்த நிலைமைகளைக் கையாண்டு இருப்பார்கள்.

சிங்கள, பௌத்த தேசிய வாதம் தமிழ் மக்களுடைய நியாயத்தை தவிர்க்க முடியாமல் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிலைமை உருவாகினால் தமிழ்த் தேசம் சார்பில் ஒரு மிகத்திறமான தீர்வைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய தரப்பு என்றால் அது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மட்டுமே என்கின்ற ஓர் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

ஓர் உச்சபட்சத் தீர்வு எட்டுவதாக இருந்தால் இயக்கம்தான் அதை பெற்றுத்தரும் என்ற நம்பிக்கை எங்களுடைய மக்களிடையே இருந்தது. இயக்கத்தை விமர்சிப்பவர்கள் கூட தமிழ்த் தேசியம் என்கின்ற கோணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்தான் தமிழ் மக்களுக்கு ஓர் உயர்ந்த தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் என்ற யதார்த்தத்தையும் உண்மையையும் அவர்களால் கூட மறுக்க முடியவில்லை.

இப்படிப்பட்ட தலைமைத்துவத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது இன்றைக்கு இருக்கக்கூடிய நபர்கள் உண்மையிலேயே அரசியல் கோமாளிகள். இனத்துக்கு வெட்கத்தை ஏற்படுத்துகின்ற நபர்களாகத்தான் அவர்கள் இருக்கிறார்கள்.

இனத்துக்காக எதையும் நடைமுறைப்படுத்தாது தங்கள் எஜமான்களுக்காக இனத்தையே விற்கக்கூடிய ஒரு கேவலமான நபர்களாகத்தான் இன்றைக்கு கட்சித்தலைவர்கள் என்று கூறிபேச்சுவக்குச் சென்றிருக்கிறார்கள்.

தமிழ் மக்களுடைய வாக்குகளையே பெற்று, ஆட்சிக்கு வந்து அவர்களுடைய நலனினை கருத்திற் கொள்ளாமல் தங்களுடைய சுய இலாபங்களுக்காகவும் வேறு வேறு தேவைகளுக்காகவும் இனத்தை விற்கின்றவர்களாகத்தான் அவர்கள் இருக்கின்றார்கள்.

ஒட்டுமொத்தமாக சிங்கள தேசத்தாலேயே நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, ஓர் இனவாத கூட்டத்துக்கு கடமைப்பட்டிருக்கிறார் என்பது எல்லோருக்குமே தெரியும். அவருடைய பேச்சுவார்த்தையை நம்பி தமிழினம் சென்று ஒரு விட்டுக்கொடுப்பினைச் செய்தால் அது ஒரு நிரந்தர விட்டுக்கொடுப்பு.

அதிலிருந்து நாங்கள் மீளவே முடியாத அளவுக்குத்தான் நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே இந்த பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதால் தமிழினத்துக்கு எந்தவிதமான நன்மைகளும் கிடைக்கப் போவதில்லை.

இவ்வாறான ஒரு நேரத்தில் தமிழினத்துக்கு எந்தவிதமான சாதகமான நிலைப்பாடும் இல்லாமல் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதென்பது இனத்தினுடைய நன்மைக்காகவா என்கின்ற கேள்வியை மக்கள் கேட்க வேண்டும்.

பேச்சுவாரத்தைக்கு போவதற்கு முன்னால் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு போலி நம்பிக்கையினை ஏற்படுத்துவதற்கு சமஷ்டியைத்தான் கேட்கப்போகின்றோம். அதை ஏற்காவிட்டால் வெளியேறுவோம் என்று விம்பத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்திவிட்டு பேச்சுவார்த்தையில் சமஷ்டி தொடர்பில் அவர்கள் வாயே திறக்கவில்லை.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பில் பேசிக்கொண்டு பேச்சுவார்த்தையில் அவர்கள் வாயே திறக்கவில்லை

(10ஆம் பக்கம் பார்க்க)







காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையைச் சேர்ந்த சட்டத்தரணிக்கு எதிரான வழக்கு; ஜஸ்மின் சூக்காவிற்கு ஆதரவாக பிரிட்டன் நீதிமன்று தீர்ப்பு



பிரிட்டனைத் தளமாக கொண்ட இலங்கை சட்டத்தரணி ஜயராஜ் பலிகவர்த்தனவிற்கு எதிரான வழக்கில் நீதிமன்றம் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஜஸ்மின் சூக்காவிற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஜயராஜ் பலிகவர்த்தன ஜஸ்மின் சூக்காவிற்கு எதிராக தவறான கருத்துக்களை தெரிவித்தமைக்காக நீதிமன்றத்தில் மன்னிப்புக் கோரியுள்ளார்.

ஜஸ்மின் சூக்கா தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு பக்கச்சார்பானவர் எனத் தெரிவிக்கும் அறிக்கையொன்றை வெளியிட்ட ஜயராஜ் பலிகவர்த்தன, 47 தூதரகங்களுக்கு அதனை அனுப்பி வைத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து பிரிட்டனின் 2018 தரவுபாதுகாப்பு சட்டத்தின் கீழ் தரவு பாதுகாப்பு மனுவொன்றை தாக்கல் செய்த ஜஸ்மின் சூக்கா தனது தனிப்பட்ட கௌரவத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தவறான தகவல் வெளியிடப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டிருந்தார்.

இயல்பாகவே இந்த குற்றச்சாட்டுகள் தவறானவை, இலங்கையின் மனித உரிமை பாதுகாவலர் என்ற அடிப்படையில் எனது பணிகளுக்கு அவதூறு கற்பிக்கும் நோக்கத்தை கொண்டவை என ஜஸ்மின் சூக்கா நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த மனுவில் தெரிவித்திருந்தார்.

மனித உரிமை ஆர்வலர்கள் பாதுகாவலர்களைப் பயங்கரவாதிகள் அல்லது அவர்களின் ஆதரவாளர்கள் என முத்திரை குத்தும் நடவடிக்கைகளில் உலகம் முழுவதும் உள்ள ஒடுக்குமுறை அரசாங்கங்கள் ஈடுபட்டுள்ளன என்பது நீதிமன்றத்துக்குத் தெரியும் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் இலங்கையை சேர்ந்த சட்டத்தரணி தான் தனது அறிக்கையில் ஜஸ்மின் சூக்காவிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த விடயங்களை நீக்க மறுத்ததுடன் ஜஸ்மின் சூக்காவிற்கு எதிராக நீதிமன்றில் மனுதாக் கல் செய்தார்.

இந்த மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இறுதியில் அவர் ஜஸ்மின் சூக்காவிற்கு குறிப்பிடத்தக்க இழப்பீட்டை செலுத்த இணங்கியுள்ளதுடன் தனது கருத்துக்களை வாபஸ் பெறுவதற்கும் இணங்கியுள்ளார்.

நீதிமன்றம் அவர் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் இணையத்தில் மன்னிப்பு கோரவேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

# கண்டி மாவட்ட தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கு எதிராக அரங்கேறும் சூழ்ச்சிகள் தோற்கடிக்கப்படல் வேண்டும்!

## தமிழ் முற்போக்கு கூட்டணியின் இளைஞர் அணி பொது செயலாளர் கோபாவேசம்

கண்டி மாவட்ட தமிழ்ப் பிரதிநிதித்துவம் என்பது காலத்தின் கட்டாயம். அந்த பிரதிநிதித்துவத்துக்கு எதிராக அரங்கேறும் சூழ்ச்சிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட இளைஞர் அணி பொது செயலாளர் ஜீவன் சரண் கோரிக்கை விடுத்துள்ளார்.



கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். இதன்போது கருத்து வெளியிட்ட அவர் –

தாய் கருத்தரிப்பதற்கு முன்னரே குழந்தைக்கு பெயர் வைத்து விழா எடுத்து விடமுடியுமா? அவ்வாறு செயற்படும் சிலரும் இருக்கவே செய்கின்றனர்.

இவ்வாறுதான் வரவு – செலவுத்திட்ட வாக்கெடுப்பில் 'நடுநிலை' என்ற எமது கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரின் நிலைப்பாட்டை 'அரசாங்கத்துக்கு ஆதரவானது' என நினைத்துக் கொண்டு சிலர் சேறுபூசும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

அதுமட்டுமல்ல, கண்டி மாவட்ட தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்வதற்கும் திட்டம்போட்டு செயற்பட்டுவருகின்றனர். இதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லை.

கடந்த காலங்களில் கண்டி மாவட்ட தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கு எதிராக உள்ளக சதிகள் அரங்கேறியும், கூட்டணி ஒற்றுமை கருதி நாம் அமைதி காத்தோம்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது காலைவாரும் முயற்சிகள் நடந்தும், நாம் எவருக்கு எதிராகவும் நடவடிக்கை கோரவில்லை.

ஏனெனில் மக்கள் எம் பக்கம் என்பது தெரியும். கூட்டணியை விட்டு சென்றவர்களுக்குகூட மீண்டும் அடைக்கலம் வழங்கப்பட்டுள்ளது. அதனையும் நாம் விமர்சிக்கவில்லை.

எனினும், என்றும் மக்கள் பக்கம் நிற்கும் வேலுகுமார் தொடர்பில், தவறான புரிதலை ஏற்படுத்தும் விதத்தில் அவருக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை ஏற்புடையது அல்ல.

சிலவேளை மாற்று சக்திகளுடன் இணைந்து, தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கு எதிராக சூழ்ச்சி நடக்கின்றதா என்ற ஐயமும் எமக்கு ஏற்பட்டுள்ளது. அதனை நிவர்த்தி செய்து, நிலைமையை சீர்செய்யும் பொறுப்பு தலைமைத்துவத்துக்கு உள்ளது.

எனவே, எமது கோரிக்கையை ஏற்று, வேலுகுமார்மீதான இடைநிறுத்தம் மீளப்பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். அந்த கௌரவமான நியாயமான முடிவு எடுக்கப்படும்வரை நாம் சுயாதீனமாக செயற்படுவோம். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# முட்டைக்கான அதிகபட்சமான விலையை நிர்ணயம் செய்யுமாறு நீதிமன்று உத்தரவு!

வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்த தீர்மானித்துள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம், முட்டைக்கான அதிகபட்ச விலையை நேற்று (புதன்கிழமை) நிர்ணயம் செய்யுமாறு நுகர்வோர் அதிகார சபைக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த மனு இன்று (வியாழக்கிழமை) மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.



# ஊவாதென்ன சுமண தேரரின் விளக்கமறியல் தொடர்ந்து நீடிப்பு

சுமார் 5 கோடி ரூபாவுக்கு தேங்காய் எண்ணெய்யைப் பெற்று அதற்காக செல்லுபடியற்ற காசோலைகளை வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள ஊவாதென்ன சுமண தேரரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுள ரத்நாயக்க நேற்று (புதன்கிழமை) உத்தரவிட்டார்.

தெமட்டகொட பிரதேசத்தில் வசிக்கும் வர்த்தகர் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து கடந்த 12 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது அவரை நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையிலேயே அவர் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரது விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.



# போதைப்பொருள் விற்பனையாளர்கள் கைது அவர்களிடமிருந்து ஆயுதங்களும் மீட்கப்பட்டன!

## மக்கள் வழங்கிய தகவலை அடுத்து அதிரடி

கும்புக கிழக்கு நாரங்கஹஹேன வீடு ஒன்றில் வைத்து ஐஸ் போதைப் பொருள் மற்றும் ஆயுதங்களுடன் இருவர் கைது செய்யப்பட்டனர் என மொரகஹாஹேன பொலிஸார் தெரிவித்தனர்.



சந்தேக நபர்களிடமிருந்து 11 கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் 4 கூரிய ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் இருவரும் ஒரே வீட்டில் வசிக்கின்றனர் எனவும், நீண்ட காலமாக புறா, வளர்ப்பு மீன் விற்பனை என்ற போர்வையில் ஐஸ் போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வந்தனர் எனவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. பிரதேச மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சோதனையின்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆடைத்தொழிற்சாலையின் பஸ் விபத்து; 5 பெண்கள் காயம்!

## பயாகலவில் சம்பவம்

ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.



இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு 10.30 மணியளவில் பயாகல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பலத்த காயமடைந்த ஐந்து பெண்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். காலி– கொழும்பு பிரதான வீதியில் வடக்கு பயாகல பிரதேசத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## செஞ்சிலுவைச் செயற்பாடு

தீர்க்கப்பட முடியாமல் கடந்த 13 வருடங்களாக இழுபட்டுக் கொண்டிருக்கும் வலிந்து காணாமலாக் கப்பட்டோர் விவகாரத்துக்கும் பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திர தினத்திற்கு முன்னர் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை – முயற்சி – எடுக்கப்படும் என ரணில் அரசு கோடி காட்டி இருக்கின்றது.

தீர்வுக்கான பேச்சை ஒட்டி, தமிழ்த் தேசியத் தரப்புகள் தம் நிலைப்பாடு என முன்வைத்த மூன்று அம்சத் திட்டத்தில், இந்தக் காணாமலாக்கப்பட்டோர் விடயம் தனித்துவமான ஓர் அம்சமாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. விரைந்து தீர்க்கப்பட முடியாதது என்று கருதியோ என்னவோ, அது தமிழ் தேசியத் தரப்புக்களின் மூன்று அம்சத் திட்டத்தில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படாமல் தவறவிடப்பட்டிருந்தது.

ஆனால் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற சர்வ கட்சி தலைவர்களின் கூட்டத்தில், முதலில் பேசிய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் இந்த விடயத்தை முக்கியமாகத் தொட்டுக் குறிப்பிட்டு, அதற்கும் சேர்த்து விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அந்தப் பின்புலத்தில், அடுத்துப் பேசிய சம்பந்தன் அதனைக் கப் எனப் பிடித்துக் கொண்டார். 'காணாமலாக்கப்பட்டோர் எல்லோரையும் நீங்கள்தானே கொன்று விட்டீர்கள். அது எமக்குத் தெரியும்' என்று அறிவித்தன் மூலம், அவர்களை இனியும் தேடுவதில் அர்த்தமில்லை என்பதை அந்தக் கூட்டத்தில் தொட்டுக் காட்டி விட்டார் சம்பந்தன்.

அதனையடுத்து, காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தையும் சேர்த்து பெப்ரவரி நாலாம் திகதிக்கு முன்னர் தீர்வு காண முயற்சிப்பது என்ற விடயத்தை அந்த நிகழ்ச்சி திட்டத்தில் துணிச்சலுடன் உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

காணாமல்போனோருக்கான அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான சட்டத்தை நிறைவேற்றி, அதற்கான அலுவலகங்களை நிறுவி, காரியங்களை நகர்த்த ஸ்ரீலங்கா அரசுகள் முயன்றனவாயினும் அவற்றை கையாளும் தரப்புக்களின் தகுதி நிலைமை, நடுநிலைப் போக்கு, நியாயச் செயற்பாடு, நீதி முறைமை ஆகியவற்றின் மீது நம்பிக்கை வைக்காத காணாமல்போனோரின் உறவுகள் அந்த முயற்சிகளை கடுமையாக எதிர்த்து வந்தனர்.

அதனால் விவகாரம் முட்டுக்கட்டை நிலையில் நகராமல் தேங்கிக் கிடக்கிறது.

யுத்த காலத்தில் தமிழர் தாயகம் எங்கும் பணியாற்றிய செஞ்சிலுவை சர்வதேச குழுவின் நடுநிலைப் போக்குக் குறித்து தமிழ் மக்களுக்கு ஓரளவு நம்பிக்கை உண்டு.

இவ்விடயத்தில் அத்தரப்பு சுயாதீனமாக செயற்பட அரசு அனுமதிக்குமால், அத்தரப்பும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி, நியாயம் கிட்டவும், பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்படவும் கட்டுப்பாடின்றி உதவ முன்வருமானால், இந்த விவகாரத்தில் தீர்வை நோக்கி நாம் முன்னேற முடியும்.

## வருட இறுதிக்கு முன்னர் சர்வதேச நாணயநிதியம் இலங்கை தொடர்பாகக் கவனம் செலுத்தாதாம்!

### - ரொய்ட்டர் தகவல்

இலங்கைக்கான 29 லட்சம் டொலர் நிதியுதவிக்கு சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்று சபை இந்த வருட இறுதிக்குள் அனுமதி வழங்காது என விடயமறிந்த வட்டாரங்கள் ரொய்ட்டருக்கு தெரிவித்துள்ளன.

தசாப்தகாலங்களில் இல்லாத பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்காக இலங்கை ஜுன் மாதம் சர்வதேசநாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட உடன்படிக்கையை செய்துகொண்டது.

இந்த உடன்படிக்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை அங்கீகாரமளிக்கவேண்டும். இலங்கை அரசாங்கம் முன்னர் வாக்குறுதியளித்த விடயங்களை நிறைவேற்றவேண்டும்.

வருட இறுதியில் சர்வதேசநாணயநிதியத்தின் நிறைவேற்று சபை அங்கீகாரமளிக்கும் என செப்ரெம்பரில் இலங்கை நம்பிக்கை வெளியிட்டிருந்தது.

எனினும் இந்த வேண்டுகோள் ஜனவரி வரை நீடிக்கப்படலாம் என நிதியமைச்சர் கடந்த மாதம் தெரிவித்திருந்தார்.

சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்று சபை அங்கீகாரமளிப்பதற்கு முன்னர் இலங்கைக்குகடன்வழங்கியநாடுகளின்உத்தரவாதம் அவசியம்.

இலங்கைக்கு அதிகளவு கடன்களை வழங்கிய மூன்று நாடுகளான சீனா, இலங்கை இந்தியா ஆகியவற்றுடன் கூட்டுப்பேச்சுகளுக்கான முக்கியத்துவத்தை சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச நாணயநிதியத்தின் வருடாந்த கலண்டரில் நாடுகளின் பொருளாதார நிலைமை தொடர்பாக டிசெம்பர் 22 ஆம் திகதி வரை விவாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது,எனினும் இலங்கை தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இது குறித்து கேள்வி எழுப்பியவேளை சர்வதேச நாணயநிதியத்தின் அங்கீகாரத்தை பெறுவது தொடர்பாக 100 வீதம் கவனம் செலுத்துவதாக இலங்கையின் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

எங்களின் இரு தரப்பு கடன்வழங்குநர்களின் நிதி உத்தரவாதங்களைப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம் என நிதியமைச்சு மின்னஞ்சல் அறிக்கையில் தெரிவித்துள்ளது. இதேவேளை ரொய்ட்டருக்கு வழங்கியுள்ள மின்னஞ்சல் கடிதத்தில் நிறைவேற்று சபை எப்போது அங்கீகாரம் வழங்கும் என்பதை உறுதி செய்ய முடியாது – பேச்சுகள் நீண்டகாலம் நீடிக்கக் கூடியவை என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பஸ்ஸில் மீட்கப்பட்ட தங்கச் சங்கிலி கல்முனையில் உரியவரிடம் ஒப்படைப்பு!



பஸ்ஸில் சக பயணி தொலைத்த தங்கச் சங்கிலியை கண்டுபிடித்துக்கொடுத்த நபரை கல்முனை பொலிஸ் தலைமையக பொலிஸார் பாராட்டியுள்ளனர்.

கல்முனை பஸ் நிலையத்திலிருந்து மட்டக்களப்பை நோக்கி சென்றுகொண்டிருந்த பஸ்ஸில் தவறவிடப்பட்ட சங்கிலியை பயணியொருவர் மீட்டு ஒப்படைத்துள்ளார்.

இந்த சங்கிலி செவ்வாய்க்கிழமை பொலிஸார் முன்னிலையில் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது பற்றி மேலும் தெரிய வருவதாவது –

கல்முனை பஸ் நிலையத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை காலை மட்டக்களப்பு மாவட்டத்தை நோக்கி சென்ற களுவாஞ்சிக்குடி டிப்போவிற்கு சொந்தமான அரச பஸ் ஒன்றில் ஒலுவில் பகுதியைச் சேர்ந்த தாதிய மேற்பார்வை உத்தியோகத்தர் தனது மகளுடன் பயணம் செய்துள்ளார்.

இவ்வாறு பயணம் செய்த நிலையில் அதே பஸ்ஸில் பெரிய கல்லாறு பகுதியில் இருந்து காத்தான்குடி பிரதேச செயலக சமுர்த்தி வங்கியில் கடமையாற்றும் மற்றுமொரு பயணியும் பயணித்துள்ள நிலையில் 2 பவுண் பெறுமதியான தங்க சங்கிலி அவரை அறியாமல் பஸ்ஸில் தவறி விழுந்துள்ளது.

இவ்வாறு தவறவிட்ட தங்க சங்கிலியை சக பயணியாக பயணித்த தாதிய மேற்பார்வை உத்தியோகத்தர் கண்டெடுத்து பஸ் நடத்துநருக்குத் தெரியப்படுத்தியதுடன் உரியநபரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

இந்நிலையில் தனது கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலி தவறவிடப்பட்டதை அறிந்த பயணி உடனடியாக அலுவலகத்தில் இருந்து தனது வீட்டுக்குச் சென்று தொலைந்த தங்கச் சங்கிலியை தேடியுள்ளார்.

பின்னர் சங்கிலி அங்கும் கிடைக்காமையால் உடனடியாக தான் பயணம் செய்த பஸ் நினைவுக்கு வரவே பஸ்ஸில் வழங்கப்பட்ட டிக்கெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொண்டு பஸ் நடத்துநரிடம் விடயத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதன்போது பஸ் நடத்துநரும் சங்கிலி ஒன்று பஸ்ஸில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதை கண்டெடுத்தவர் உரியவரிடம் ஒப்படைக்க விரும்புகிறார் எனவும் அவரை தொடர்பு கொண்டு உரிய ஆதாரங்களை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்கமைய தவறவிடப்பட்ட தங்கச் சங்கிலியை கண்டெடுத்த தாதிய மேற்பார்வை உத்தியோகத்தரை தொடர்பு கொண்டு கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தங்கச் சங்கிலியின் உரிமையாளரான பெண் பயணி தான் கொண்டு வந்த ஆதாரங்களை பொலிஸார் முன்னிலையில் சமர்ப்பித்துள்ளார்.

இதன் போது கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக வழிநடத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் கல்முனை குற்றப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் உள்ளிட்டோர் முன்னிலையில் தவறவிடப்பட்ட தங்கச் சங்கிலி தொடர்பான ஆதாரங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் சுமார் 3 லட்சம் ரூபாவிற்கும் அதிகமாக பெறுமதி கொண்ட தங்க சங்கிலி பொலிஸார் முன்னிலையில் உரிமையாளரான பெண் பயணியிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலும் பஸ்ஸில் தவறவிடப்பட்ட 2 பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலியை பொலிஸார் முன்னிலையில் உரிமையாளரிடம் ஒப்படைக்க முயற்சி செய்த தாதிய மேற்பார்வை உத்தியோகத்தரை கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல். புத்திக, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர்,



குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் உள்ளிட்டோர் முன்னிலையில் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நேற்று முன்தினம் சர்வகட்சி கூட்டத்தின் காட்சிகள்
















காலைக்கதிர் Kalaikkathir



# ஐ.எம்.எவ். உதவி இல்லாவிட்டாலும் நாட்டை ஸ்திரப்படுத்த வேண்டுமாம்!

## என்கின்றார் மத்திய வங்கி ஆளுநர்

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் அல்லது இல்லாவிட்டாலும் நாட்டை ஸ்திரப்படுத்த வேண்டும் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் சங்கத்தின் வருடாந்த ஆய்வு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மத்திய வங்கியின் ஆளுநர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

நாம் தற்போது பாரிஸ் கழகம், ஜப்பான் மற்றும் சீனா உள்ளிட்ட எமது இரு தரப்பு கடன் கொடுநர்களிடமிருந்து நிதி உறுதிப்பாட்டை பெறும் நடவடிக்கையில் உள்ளதாகக் கூறினார். அத்துடன், இந்த நடவடிக்கையை மத்திய வங்கி முழுமையாகக் கைவிட்டுள்ளதாக சில ஊடகங்களில் செய்தி வெளியாகிய போதும் பேச்சு இடைநிறுத்தவில்லை என அவர் கூறினார்.

தொடர்ந்தும் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சை முன்னெடுத்து வருகிறோம் என்றும் அதனை பூரணப்படுத்தும் முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொள்வதாகவும் நந்தலால் வீரசிங்க குறிப்பிட்டார்.

மேலும் நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கு குறுங்கால அல்லது நீண்டகால மறுசீரமைப்பை செய்ய வேண்டும் என்றும் நந்தலால் வீரசிங்க குறிப்பிட்டார்.



# அன்ரன் பாலசிங்கத்தின் 16 ஆம் ஆண்டு நினைவு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்ற இந்த நிகழ்வில் தீபமேற்றப்பட்டு அன்ரன் பாலசிங்கத்தின் படத்துக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்றஉறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அமைப்பாளர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கடலட்டை பண்ணைகளுக்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவாக யாழ்.மத்திய பஸ் நிலையம் முன் போராட்டம்!

## *மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நாளை*

(இ.கலையமுதன்)

கிளிநொச்சி மாவட்ட கிராஞ்சி பகுதி மக்களின் கடலட்டை பண்ணைகளுக்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நாளை (வெள்ளிக்கிழமை) யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக போராட்டமொன்று இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக காலை 10 மணிக்கு ஆரம்பிக்கும் போராட்டம் வடமாகாண ஆளுநர் செயலகத்தில் நிறைவடையவுள்ளது.

போராட்ட நிறைவில் வடமாகாண ஆளுநர் செயலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கு மகஜர் கையளிக்கப்படவுள்ளது.

போராட்டத்துக்கான அழைப்பை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதிநிதிகள் யாழ். ஊடக அமையத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் விடுத்தனர்.

கிராஞ்சி பகுதி மீனவர்களின் போராட்டத்தை உரிய தரப்பினர் கண்டுகொள்வதாக இல்லை. மக்களின் விருப்புக்கு மாறாக கடலட்டை பண்ணைகளை அமைக்க முடியாது. கடலட்டை பண்ணையை முன்னுரிமைப்படுத்தி அரசாங்கம் செயற்படுகிறது.இதில் பல்தேசிய கம்பனிகளே நன்மை பெறுகின்றன என தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஆ.சதீஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாணத்திலுள்ள அனைத்து சிவில்சமூகத்தினரும் அரசியல் தரப்புகளும் பங்கேற்று போராட்டத்துக்கு ஆதரவளித்து பங்கேற்க வேண்டுமென இ.முரளிதரன் அழைப்பு விடுத்தார்.




சிறிய மீனவர்கள் பழிவாங்கப்படுகின்றனர். இந்நிலை தொடர்ந்தால் பாரிய நெருக்கடி நிலை ஏற்படுமென தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் பெனடிக் குரூஸ் தெரிவித்தார்.

அரசாங்கம் தனது இலாபங்களுக்காக கடலட்டை பண்ணையை உருவாக்குகிறது. இதற்காக கடலட்டை பண்ணைக்கு ஆதரவான கருத்தை நக்டா வெளியிடுகிறது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் எமது பகுதி வளங்கள் சுரண்டப்படுகின்றன. எங்கள் வளங்களை சுரண்டிவிட்டு அரசியல் தீர்வு தந்து பயனில்லை என தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தைச் சார்ந்த இன்பம் கருத்து தெரிவித்தார்.

கிராஞ்சி இலவன்குடாவில் சட்டவிரோத கடலட்டை பண்ணைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து 76 நாள்கள் போராட்டம் இடம்பெற்று வருவதாகவும் அரசியல் தரப்புக்கள் கண்டுகொள்வதில்லை என்றும் ஊடகசந்திப்பில் கருத்து தெரிவிக்கப்பட்டது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# போதைப்பொருள் பயன்படுத்துவோர், விற்போரின் வீட்டு நிகழ்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கோம்!

## மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் அதிரடி

அம்பாறை, டிசெ. 15

போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள், விற்பவர்களின் வீடுகளில் நடைபெறும் திருமணம், ஜனாஸா கடமைகளுக்கு தமது ஒத்துழைப்பை வழங்கப்போவதில்லை என சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் பொறுப்பாளர் சபையால் நடாத்தப்பட்ட மாதாந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய மேற்கொண்டுள்ள இந்த தீர்மானத்தை எதிர்வரும் 2023 ஆண்டு முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள், அதனை வியாபாரம் செய்பவர்களின் ஜனாஸாக்கள் தங்களின் மையவாடியில் அடக்கம் செய்யப்படமாட்டா எனவும் பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

அவ்வாறானவர்களின் பெயர் விவரங்கள் விளம்பர பலகை மூலம் காட்சிப்படுத்தப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

போதைப்பொருளுடன் தொடர்புடையவர்களின் விவரங்களை உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் புதிய காத்தான்குடி அல் அக்ஸா பெரிய ஜும்மா பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவதரித்த 200 ஆவது ஆண்டு நிறைவு மாநாடு நேற்று யாழில் கோலாகலமாக ஆரம்பம்!







ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவதரித்து 200 ஆவது ஆண்டு நிறைவு மாநாடு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டிலும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை மற்றும் யாழ்.மாநகரசபை சமய விவகாரக் குழு ஆகியவற்றின் இணை ஏற்பாட்டிலும் யாழ்ப்பாணம் நல்லூரில் நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்திலே ஆன்மிக அரங்கின் தொடக்க நிகழ்வுகள் நேற்று (புதன்கிழமை) காலை 7.30 மணிக்கு குருபூஜை நிகழ்வுகளோடு ஆரம்பமாகின.

அதனைத் தொடர்ந்து நாவலர் பெருமானின் வரலாற்றைச் சித்திரிக்கின்ற ஓவியங்களும் நாவலர் பெருமானால் சமூகத்திற்குத் தரப்பட்ட படைப்புகளும் உள்ளடங்கிய கண்காட்சி நிகழ்வின் அங்குரார்ப்பண வைபவமும் இடம்பெற்றது.

காலை 8 மணிக்கு நாவலர் பெருமானின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்வலம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலிருந்து நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபம் நோக்கிப் பவனிவந்தது.

நாவலர் கலாசார மண்டபத்திலே, பெயர்ப் பலகைத் திரை நீக்கத்தைத் தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானுக்கான குருபூஜை நிகழ்வுகளோடு ஆன்மிக அரங்கின் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் m.z. ஜெகதீஸ்வரக் குருக்கள், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.அனிருத்தன், யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், சமயப் பெரியார்கள், கல்விமான்கள், அறநெறிப் பாடசாலைச் சமூகத்தினர், பல்கலைக்கழக சமூகத்தினர் எனப் பலரும் பங்கெடுத்தனர்.

நாவலர் பெருமானின் குருபூஜை நாளான நேற்றைய நிகழ்வுகள் ஆரம்பமாகி எதிர்வரும் 17 ஆம் திகதி வரையில் தொடர்ச்சியாக இடம்பெற்று நாவலர் பெருமானின் ஜனன தின நாளான டிசெம்பர் 18 ஆம் திகதி மாநாடு நிறைவடையவுள்ளது.

இம்மாநாட்டு நிகழ்வுகள் நல்லூரிலே நாவலர் மணிமண்டபம், நாவலர் கலாசார மண்டபம், ஸ்ரீ துர்க்கா மணிமண்டபம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபம் ஆகிய இடங்களிலே ஆன்மிக அரங்கு, பொது அரங்கு, ஆய்வரங்கு என்பவற்றில் இடம்பெறவுள்ளன.

## இரத்ததானம் முகாம் நாளை

நல்லூர் பிரதேச சபை சுகாதார தொழிலாளர்கள் நடாத்தும் இரத்ததான முகாம் நாளை (வெள்ளிக்கிழமை) நடைபெறவுள்ளது.

இரத்ததானம் செய்ய ஆர்வமுள்ள அனைவரும் இந்நிகழ்வில் பங்குபற்றி உயிர் காக்கும் உன்னத பணிக்கு உரமூட்ட வேண்டுகிறோம்.

இந்த நிகழ்வு நாளை (வெள்ளிக் கிழமை) நல்லூர் பிரதேச சபையில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை நடைபெறும்.

## மத்துகம சஹ்றானின் மனைவி கட்டுநாயக்கவில் வைத்து கைது!

சுமார் 25 கோடி ரூபா பணத்தை வங்கிக் கணக்கிலும் வைப்பிலும் வைத்திருந்த மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்த திட்டமிட்ட குற்றவாளியான சஹ்றான் அரோஸ் ஜயசிங்க என்ற மத்துகம சஹ்றானின் மனைவி கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார் எனக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துப் புலனாய்வுப் பிரிவினர் செவ்வாய்க்கிழமை மத்துகம நீதிவான் நீதிமன்றில் விமானப் பயணத் தடை உத்தரவைப் பெற்றனர் எனவும், அதன் பிரகாரம் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


**கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு**
**(பழைய பாடத்திட்டம்)**
**மீள்பரீட்சை - 2020**

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கலைப்பீட மாணவர்களிடமிருந்து **16/12/2022** திகதி முதல் கலைப்பீடாதிபதி அலுவலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

* விண்ணப்பப்படிவங்களை மாணவர்கள் கலைப்பீட அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது கலைப்பீட இணையத்தளத்திலிருந்து **(https://www.arts.jfn.ac.lk/)** தரவிறக்கம் செய்யலாம்.

*பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் **30/12/2022** திகதி வரை கலைப்பீடாதிபதி அலுவலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

* விண்ணப்பங்களை நேரடியாக சமர்ப்பிக்க முடியாத மாணவர்கள் **“பீடாதிபதி அலுவலகம், கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்”** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க முடியும்.

* மீள் பரீட்சார்த்திகள் மற்றும் மருத்துவ காரணங்களால் முதல் தடவையாக பரீட்சைக்கு தோற்றும் அனைவரும் ஒரு பாடஅலகிற்கு மீள் பரீட்சை/ பரீட்சை கட்டணமாக ரூபா **250/=** வீதம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**மக்கள் வங்கிக் கணக்கிலக்கம் : 480000022100084**

* விசேட தேவையுடைய மாணவர்களும், பார்வைக் குறைபாடுடைய மாணவர்களும் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னராக கலைப்பீடப் பிரதிப்பதிவாளரைச் சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**விண்ணப்ப முடிவுத்திகதியின் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும்.**

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**14- 12 - 2022**

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## இன்றைய பேச்சுக்கு முன்னான நாடு

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 212

தமிழ் மக்கள் காவி கொண்டு திரியும் எந்த இறைச்சித்துண்டை விட்டெறிந்தால் சிங்கள மக்கள் வல்லூறுகள் போல வன்முறைகள், இனக் கலவரங்கள் என அவர்களை கொத்திக் குதறுவதை நிறுத்துவார்கள்?

1958இன் கலவரங்களை ஆராய்ந்தவர்கள், தமிழ் மக்கள் அநேகமாக அரசாங்க, தனியார் துறை உத்தியோகங்களில் அமர்ந்திருந்ததும், அது பெரும்பான்மைச் சிங்களவர்களின் இடங்களாதலால் தாமே அதற்கு உரியவர்கள் என்ற எண்ணப்பாடுகள் சிங்களவர்களுக்கு ஏற்பட்டமை ஒரு காரணம் எனக் கணித்தார்கள். அந்தக் கலவரத்தில், அரசாங்க, தனியார் துறை நிறுவனங்களில் வேலைக்குச் சென்று திரும்பிய தமிழர்கள் குண்டர்களால் 'அப்பே ஆண்டுவ'




(எங்கள் அரசாங்கம்) என்ற கோஷங்களுடன் தாக்கப்பட்டமை ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

அடுத்து, முக்கியமாகக் கொழும்பு பகுதியில் கலவரங்கள் பெருவாரியாக நடந்தது, வீடுகள் – கடைகள் எரிக்கப்பட்டது தமிழ் மக்கள் பெரும்பான்மையில் வசித்த வெள்ளவத்தையிலும், அவர்கள் பெரும்பான்மையாக வாழக் காணிகளை வாங்கி, வீடுகள் கட்டிய இரத்மலானைப் பகுதியிலும்தான். இனக்குரோத சரித்திரங்களின் படி, ஓர் இனக் குழுமம் தங்களது பாதுகாப்பிற்கும், வசதிகளுக்காகவும் குறிப்பிட்ட பகுதிகளில் கூடி வாழ்வது சகஜம். ஆனால் அது, தனியிடம், சேரி என்ற மனப்பாங்குகளை வளர்க்கின்றது. அந்த மனப்பான்மை அந்தக் குழுமத்தின் உள்ளிருந்தே வளர்ந்தாலும், அப்படிப்பட்ட வாழ்க்கை முறைஅதைச்சுற்றியுள்ளவர்களிடையே சாதாரணமாகக் காழ்ப்புணர்வை ஏற்படுத்துவதில்லை. ஆனால் எப்பொழுதுமே கவனிப்புத் தன்மைகளுக்கு ஆளாகிவிடுகிறது. அந்தக் கவனிப்புகள், சட்டம் – ஒழுங்கு என்பன சீர்குலையும் போது ஆத்திரமூட்டுவனவாகி, காழ்ப்புணர்வுகள் வெளிவந்து, வன்முறைகளுக்கு வழிகள் வகுக்கின்றன.

அந்த வருடங்களில் காலி வீதி விஸ்தரிக்கப்பட சேர் ஜுன் கொத்தலாவைக்கு இரத்மலனையிலிருந்த கறுவாத் தோட்டத்தின் பகுதிகளை விற்பனைக்குத் தர, அந்த காணிகள் தொழிற்பேட்டைகளாகவும், பள்ளிக்கூடங்கள், குடிமனைகள் எனவும் வளர்ந்தன. அந்தப் பகுதியில் கொழும்பு இந்து கல்லூரியின் விஸ்தரிப்புக்காக பல ஏக்கர் காணி கொள்வனவு செய்யப்பட்டு, கலாசாலைத் தரத்துக்கு வளரக்கூடிய திட்டங்களுடன் கல்லூரியின் வளாகம் கட்டப்பட்டது. அந்தக் காணியின் ஒரு பகுதி வீடுகளுக்கான மனைத் துண்டுகள் ஆக்கப்பட்டு, தமிழ் மக்களது குடியமர்வுக்கு விற்பனை செய்யப்பட்டன. இந்த முயற்சி தமிழ் மக்கள் வெள்ளவத்தை போல இரத்மலானையிலும் இன்னுமொரு 'குட்டி யாழ்ப்பாணம்' ஆக்கப் போகின்றார்கள் என்ற பிரச்சாரம் அங்கு நடந்த பெருமளவு எரிப்புகளுக்கும் தமிழ் மக்கள் அனுபவித்த வன்முறைகளுக்கும் காரணம் ஆயிற்று. தாங்கள் ஒரு நாட்டின் முழுமையான சமுதாயத்தின் பங்காளிகளாக இருக்க விரும்பும் சிறுபான்மை, தங்கள் மேல் தேவையற்ற கவனங்களை இழுக்கும் நடப்புகளில் ஈடுபடக் கூடாது என்பது முக்கியமாக ஐரோப்பாவின் யூதர்களின் வாழ்வு முறைகளை ஆராய்ந்த சில சரித்திர புத்திஜீவிகளின் கருத்து.

1958 கலவரகாலங்களில் தமிழீழமோ இறைமை நிலை நாட்டப்பட வேண்டும் என்ற கோஙகளோ இருக்கவில்லை. பெரும்பான்மை சுதந்திரம் பெற்றுக் கொண்டதிலிருந்து தனது அதிகாரத்தில் வரவுகள் தரக்கூடிய வளங்களை தன்னகத்தை கைப்பற்றி கொள்ள எடுத்த முன்னோடி நடவடிக்கைகளே அவை. பண்டாரநாயக்கா – செல்வநாயகத்தின் இணக்கப்பாடுகளை எதிர்த்தவர்களது அடிமட்டக் காரணம், வடகிழக்கின் வளங்கள் ஓர் இனத்தின் ஆளுமைக்குள் கையளிக்கப்பட முடியாது என்பதே.

சோல்பரி அரசமைப்பின் 29 ஆம் சரத்து இருந்தும் சிங்களம் மட்டும் சட்டம் சிறுபான்மை மக்களின் பாதுகாப்புக்கு எதிராக நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டது. பின் கோடீஸ்வரனது வழக்கில் இவை பற்றி ஆராயப்பட்டாலும், பெரும்பான்மை தங்களது ஆதிக்கங்களுக்கு ஏற்ப அரசமைப்புச் சட்டங்களை ஏற்படுத்திக் கொண்டன.

தமிழ் மக்கள் தமிழீழம் ஏற்படுத்த 1976 இல் வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றி, மக்களது ஆணையும் பெற்றனர். அதைத் தொடர்ந்த 1977 ஆம் ஆண்டு கலவரத்தை விசாரித்த ஆணைக்குழுவின் சன்சோனி 'தமிழீழம்'



கேட்டதே சிங்களவர்களின் காழ்ப்புணர்வுகள், வன்முறைகளாக வெடிப்பதற்குக் காரணம், கூட்டணித் தலைவர்கள் இப்படியான யதார்த்தமற்ற கொள்கைகளை அரசியல் லாபத்துக்காக மேற்கொள்வது மேலும் மேலும் துர்ப்பாக்கியங்களுக்கு இடம் கொடுக்கும் என்றார்.

அப்படியான புத்திமதிகளில், சர்வதேசத்தின் புத்திமதிகளையும் உள்வாங்கி, தமிழீழம் என்ற இறைச்சித் துண்டை அப்பொழுதே கை விட்டிருந்தால், பின்



நடந்த அனர்த்தங்கள் தடுக்கப்பட்டு இருக்குமா? கௌதம புத்தருக்கே இது வெளிச்சம்.

ஆனால் தமிழ் மக்கள், அவர்களின் தலைவர்கள் அதை விடவில்ல. அதை பாதுகாத்துக் கொள்ள திம்புவில் கருடன் கூறிய அறிவுரைகளையும் புறந்தள்ளி, ஆயுதப் போராட்டம் வல்லூறுகள் கொத்திக் கிளறிய போதும் நடத்தினார்கள். அந்தப் போரினால், இறைச்சித் துண்டைப் பிடித்துக் கொள்ளவும் முடியாமல், அதைக் கைப்பற்றிய வல்லூறுகள் அதனை உண்ணவும் முடியாமல், அதற்காக நடத்திய சண்டையின் ஊனங்களால் பட்டினியால் வாடுகின்றன.

போரின்பின் தமிழ் கூட்டமைப்பு மக்களிடம் சென்று, தாங்கள் 'தனிநாடு', 'தமிழீழம்' என்ற கோரிக்கைகளை விட்டு, சமஷ்டி தான் கேட்கிறோம் என்று, அதற்கான ஆணையும் பெற்றார்கள்.

பிரபாகரனின் ஆளுமையாலோ அன்றில் அறியாமையாலோ நடந்த போரின் அத்திவாரங்கள் மறக்கப்பட்டன.

தமிழ் மக்கள் தாங்கள் விரும்பாத, இணங்காத பந்தத்தில் அவர்களிடம் இருந்த ஒரு வர்க்கம் காலனித்துவ காலங்களில் அதேயான சிங்கள வர்க்கத்துடன் இருந்த உறவுகளால் ஏற்படுத்தப்பட்ட கட்டாய பந்தத்தை கணக்கெடுக்காமல் விட்டது.

சுதந்திர காலத்தில் முன்னரோ அன்றில் அது தொடங்கிய சில வருடங்களிலோ, சாதாரண தமிழ் மக்களோ அன்றில் அவர்களது விவசாயிகளோ, சாதாரண சிங்கள மக்களையோ அவர்களது விவசாயிகளையோ சந்தித்ததோ அறிமுகம் செய்து கொண்டோ கொண்டவர்கள் அல்லர். சிங்களப் பெரும்பான்மை தெற்கிலும், மேற்கிலும், தமிழ் மக்கள் வடக்கிலும், கிழக்கிலும் வாழ்ந்து வந்த போது சிங்களவர் சந்தித்து, அறிந்து பழகிய தமிழ் மக்கள் அவர்களிடைய சில்லறைப் பெட்டிக்கடை நடத்தியவர்கள் அல்லது அரசாங்கத் திணைக்களங்களில் அவர்களது பகுதிகளில் கடமையாற்றியவர்களாக இருந்தவர்கள்தான்.

வடக்குக் கிழக்கில் அறியப்பட்ட சிங்களவர்கள் கூட, பேக்கரியர்கள் நடத்தியவர்களாகவோ அன்றில் தச்சு தொழில் செய்தவர்களாகவோ இருந்தார்கள்.

இந்த இரண்டு பகுதிகளுக்கும் இடையே இருந்த பெரும் காடுகள் இரு பகுதிகளையும் தனிமைப்படுத்தி இடைவெளிகள் தந்து வைத்திருந்தன. அவர்கள் இப்படி வாழ்ந்ததால் 1958க்கு முன் வன்முறைகள் எழவில்லை. ஆக காலனித்துவம் ஏற்படுவதற்கு முன்னரான மன்னர்களின் போர்களில் அகப்பட்டதைத் தவிர.

ஆனால், காடுகளை அழித்து, நிலங்களைத்திருத்தி, கழனிகள் அமைப்பதற்கு வடமத்திய மாகாணத்தில் இருந்த சிங்கள மக்களைக் குடியேற்றி, அவர்களுக்கு அரசாங்கங்கள் பக்கபலமாக நிற்க இனக்குரோதங்களும் உரசுகளும் வளர தொடங்கின.

இந்தக் கட்டாய பந்தத்தில் இருந்து தமிழ் மக்களை நீக்கிவிட வேண்டும் எனத்தான் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர்வேற்பிள்ளை அடிக்கடி அங்கு பேசினார். பின் இந்திரா காந்திக்குக் கூட மனுக்கள் தந்தார். அவை நடக்கவில்லை.

1987 இல் இந்தியா நிரந்தரப் பிரிவு என்பதை ஏற்காது, இடைநிலையில் தனித் தனியாக வடக்குக் கிழக்கு இணைத்து வாழலாம் என்ற ஒப்பந்தத்தை ஏற்படுத்தியும் அந்த இடைக்காலப் பிரிவை இரு பகுதினரும் ஏற்றுக்கொள்ளவில்லை. தற்பொழுது பேசுவதற்கு மேசைகளை நாடுவோர் தனித்தன்மையுடனான சமஷ்டியை முன்னெடுக்கிறார்கள். சிங்கள தரப்போ இணைந்து, ஒரு சமூகத்தின் அங்கத்தவர்களாக வாழ்வதாயின் தனித்



தன்மை உள்ள அமைப்புகளோ சமஷ்டியோ தேவையில்லை, தரப்போவதும் இல்லை என்கிறார்கள். அந்த நிபந்தனைகள் வைக்கப்படுகின்றன.

"தமிழீழ விடுதலைப் போர்க்களத்தில் பங்கு கொண்டு, சிங்கள இனவெறிப் படைகள் உயிர் பறிக்கத் தேடியலைந்த காலச் சூழலில் தப்பிப் பிழைத்து, உலக நாடுகளில் ஏதிலிகளாய் தஞ்சம் புகுந்த 15 லட்சம் ஈழப் போராளிகள் தமிழீழ விடுதலை ஒன்றே குறிக்கோளாய் கொண்டு தணலென எரியும் நெருப்பு மலையாய் நிற்கிறார்கள். மேசைகள் மீது இவர்களுக்கு ஆசைகள் இல்லை. முள்ளிவாய்க்கால் முடிந்து 12 ஆண்டுகள் ஆகியும், இன்னும் ஈழத் தமிழன் இறையாண்மை கொண்ட தமிழீழ விடுதலை ஒன்றே முடிந்த முடிவென்று களத்தில் முழுமூச்சோடு நிற்கிறான். காத்திருங்கள். தமிழீழ விடுதலை கனவல்ல, காலத்தின் கட்டாயம்" – என உணர்ச்சி கவிஞர் காசி ஆனந்தன் ஈழத் தமிழர் நட்புறவு மையத்தின் தலைவராக அறைகூவியுள்ளார்.

சிங்கள அரசாங்கம், சர்வதேச சமுதாயம், போருக்கு பின்னான மக்கள் ஆணை எனக் கூட்டமைப்பு கூறும் ஆணித்தரங்களை இறைச்சித் துண்டு விடப்பட்டது எனக் கருதி பேசுவதாக அன்றில் புலம்பெயர் மக்களிலும் அவர்கள் உந்தும் அரசியல் பரப்புகளிலும், அது அப்படியே இருக்கிறது, தாங்கள் நாட்டின் நிலைமையைப்பாதுகாக்களடுக்கும்நடவடிக்கைகள் யதார்த்தமானவை எனத் திரும்பவும் சர்வதேசங்களை தம் பக்கத்துக்கு வளைப்பதா?

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

### பேசச் சென்றமை ......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பதையே இன்று ஊடகங்களுடைய தலைப்புச்செய்திகளும் வெளிப்படுத்தியிருக்கின்றன.

பேச்சுவார்த்தை மேசையில் நீங்கள் போய் அமர்ந்து கொள்வதனூடாகவே ரணிலுக்கான அங்கீகாரத்தை கொடுப்பதாக அமையும் என்பதை இவர்களுக்கு நாங்கள் மீண்டும் மீண்டும் கூறினோம். அவர் இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்புவதற்கான வாய்ப்பை நீங்கள் கொடுத்துவிட்டீர்கள்.

ஆகக்குறைந்தது அந்த அங்கீகாரத்தை கொடுப்பதாக இருந்தால் இனத்துக்காக கொள்ளை ரீதியிலாகவாவது எங்களுக்கொரு முன்னேற்றத்தை கொடுக்கக்கூடியசூழலையாவது உருவாக்காமல் அந்த அதிகாரத்தை கொடுப்பதானது எதிர்காலத்தில் எங்களுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என்றார்.

### அரசின் தீர்வு முயற்சி; ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைக்கு 52 நாள்களில் தீர்வினை காண முடியும் என அரசாங்கம் நினைப்பது வேடிக்கையானது என்றும் தெரிவித்தார்.

அனைத்து கட்சிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட விடயம் குறித்து கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தகூட்டத்தில்தமிழ்பிரிவினைவாதிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு சிங்கள தரப்புக்கள் எதிர்ப்பு வெளியிட்டன என் உதய கம்மன்பில குறிப்பிட்டார்.

இதேவேளை பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்பாக, அதிகாரப் பரவலாக்கம் குறித்து அனைவரும் இணக்கத்திற்கு வரவேண்டும் என்று ஜனாதிபதி இதன்போது கேட்டுக்கொண்டார் எனவும் கூறினார்.

65 வருடங்களாக இதுதொடர்பாக தொடர்ச்சியாக முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் இதன்மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட முடிவுகள் தொடர்பாக அனைவரும் அறிந்திருக்க வேண்டும் என்றார்.

இந்நிலையில், மீண்டும் இதற்கான முயற்சிகளை எடுக்கும் இந்த அரசாங்கத்திற்கு உண்மையில் பைத்தியம் பிடித்துவிட்டதாகவே கருத வேண்டும் என்றும் உதய கம்மன்பில தெரிவித்தார்.

### முல்லையில் காணி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நில அளவீட்டு நடவடிக்கை நேற்றும் இரண்டாவது நாளாக முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிந்த காணி உரிமையாளர்கள் பலர் கடற்படை முகாமிற்கு முன்னால் ஒன்றுகூடிஎதிர்ப்பினைவெளிப்படுத்தியுள்ளார்கள்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமையும் அளவீட்டு நடவடிக்கை இடம்பெறும் என அறிந்து மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கடற்படைமுகாம் முன்பாக கூடி எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

கொழும்பிலிருந்து வருகைதந்த நில அளவையாளர்கள் குழு ஒன்று அளவீட்டு நடவடிக்கை இடம்பெறும் இடத்துக்கு கடற்படை வாகனம் ஒன்றில் இரகசியமாக துப்பாக்கி முனையில் அழைத்து சென்று காணிகளில் அளவீட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாக அறிந்த காணி உரிமையாளர்களான தமிழ் மக்கள் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் உள்ளிட்டவர்களும் கோட்டாபய கடற்படை முகாம் வாசலை மறித்து எதிர்ப்பு நடவடிக்கியில் ஈடுபட்டிருந்தனர்.

காணி உரிமையாளர்களும் மக்கள் பிரதிநிதிகளும் மாவட்ட செயலகம் சென்று மேலதிக மாவட்ட செயலாளர் கனகேஸ்வரன் மற்றும் மேலதிக மாவட்ட செயலர் (காணி) குணபாலன் ஆகியோரை சந்தித்து இரகசியமுறையிலான காணி அளவீட்டுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தியதோடு தமது காணிகளை எந்த நிலையிலும் கடற்படை தேவைகளுக்கு சுவீகரிப்பதை ஏற்றுக்கொள்ள முடி



யாது என்பதை பதிவு செய்தனர். நேற்றையதினம் இடம்பெற்றுவரும் நில அளவீடு சட்ட விரோதமானது என்பதோடு காணி உரிமையாளர்களின் பங்கேற்பு இன்றி இடம்பெற்றுவரும் இந்த நடிக்கை தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குள்ளாக்கும் வகையில் இராணுவ மயமாக்கலுக்கு உடந்தையானது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மாவட்ட செயலக அதிகாரிகள் முன்னிலையில் தெரிவித்தார்.

### நியதிச் சட்டம் ஆக்கிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஊடாக நேற்றைய தினம் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது..

### மின்சாரம் தாக்கி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரும்பு ஒட்டும் கடைஒன்றில் வேலை செய்துவந்தார்.

மின்இணைப்பினை இணைக்கும் முயற்சியினை மேற்கொண்டபோது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே அந்த இளைஞன் உயிரிழந்துள்ளான்.

சம்பவத்தினை தொடர்ந்து இளைஞனின் சடலம் இளைஞர்களால் மீட்கப்பட்டு தர்மபுரம் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை எடுத்து செல்லப்பட்டுள்ளது.

### வடக்கு ஆளுநரின் ....



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 'வடக்கு ஆளுநரே மோசடிகளுக்கு ஆதரவா?', 'பேஸ்புக் செயலாளர் வடக்கு கல்வியில் எதற்கு?', 'வடக்கு கல்வியை திருடர்களின் கூடாரமாக்காதே!', 'அடிமைச் சேவகம் புரியும் தொழிலாக ஆசிரியத்தை மாற்றாதே!' – போன்ற பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்குள் அழைக்கப்பட்டு பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

### ஒற்றையாட்சிக்குள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி தமிழ்க்கட்சிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார் எனக் கூறப்படுகின்றது. ஆனால் ஒற்றையாட்சியையே ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஏற்கின்றது.

13 பிளஸ் என்ற யோசனையை மஹிந்த ராஜபக்ஷவே முதன் முதலில் முன்வைத்தார். அதன்மூலம் நாட்டின் ஒற்றையாட்சி உறுதிப்படுத்தப்பட்டது. சொல்லளவில் இருந்த ஒற்றையாட்சியை மஹிந்த ராஜபக்ஷவே நிஜமாக்கினார்.

நாட்டின் தேசியக் கொடியை எங்கு வேண்டுமானாலும் ஏற்றக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினார். ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள்ளேயே நடவடிக்கை இடம்பெறும். எனவும் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622

# இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த வார்னிஷ், நக பொலிஷ் பிடிபட்டன





(ந.லோகதயாளன்)

இலங்கைக்கு கடத்தும் நோக்கில் தமிழகத்தின் வேதாளை கடற்கரைக்கு எடுத்து வந்த வார்னிஷ் மற்றும் நக பொலிஷ் என்பன தமிழக பொலிஸாரால் இன்று அதிகாலை கைப்பற்றப்பட்டுள்ளன.

தமிழகம் வேதாளைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சமயம் கியூ பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பெயரில் மேற்கொண்ட சோதனையிலேயே இப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட பொருட்களில் 50 லீற்றர் கொள் அளவு கொண்ட 30 கான்களில் வார்னிஷும் 30 லீற்றர் கொள் அளவு உடைய 11 கான்களில் நகப் பொலிஷும் காணப்படுகின்றன..

இந்தப் பொருள்கள் இந்திய நாணயத்தில் ஒரு கோடி ரூபாவிற்கும் அதிக பெறுமதியுடையவை எனத்தெரிவிக்கப்படுகின்றது.






காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டில் 80 வீதமான பல்கலைக்கழக மாணவர்கள் பலவந்தமாக போராட்டத்தில் ஈடுபடுத்தப்படுகின்றனர்

## எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு



மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்ப்பதற்கு முன்னர் அவர்களுக்கு ஒழுக்கம் தொடர்பில் இராணுவ முகாம் ஊடாக பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழகங்களின் தற்போதைய நிலை தொடர்ந்தால் நாட்டின் எதிர்காலம் முழுமையாக இல்லாதொழிக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பல்கலைக்கழக மாணவர்கள் விருப்பத்துடன் போராட்டங்களில் கலந்துகொள்வதில்லை, 80 சதவீதமான மாணவர்கள் பலவந்தமான முறையில் போராட்டத்தில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

போராட்டத்தில் ஈடுபடாவிட்டால் மாணவர் சங்கங்களால் பகிடிவதை மற்றும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்க முன்னர் அவர்களுக்கு மூன்று அல்லது நான்கு மாத காலம் இராணுவ முகாம் ஊடாக ஒழுக்கம் தொடர்பான பயிற்சி வழங்க வேண்டும்.

பல்கலைக்கழகங்களில் தற்போது ஒழுக்கம் என்பதொன்று கிடையாது. குறுகிய அரசியல் நோக்கத்துக்காக ஒரு தரப்பினர் பல்கலைக்கழக மாணவர்களைத் தவறாக வழிநடத்துகிறார்கள்.

பல்கலைக்கழகங்களின் தற்போதைய நிலை தொடர்ந்தால் நாட்டின் எதிர்காலம் முழுமையாக இல்லாதொழிக்கப்படும். பல்கலைக்கழகங்களை மறுசீரமைக்க முறையாக செயற்திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும். உயர்கல்வி,கல்வி மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளை வேறுபடுத்தாமல் ஓர் அமைச்சு கட்டமைப்பின் கீழ் கொண்டு வர வேண்டும்.

பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாக மாற்றமடைந்துள்ளது. தற்போதைய இக்கட்டான சூழ்நிலையை மக்கள் விடுதலை முன்னணியினர் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறார்கள். மக்களாணையை பெற வேண்டுமானால் மக்கள் விடுதலை முன்னணியினர் முதலில் ஒழுக்கமாக செயற்பட வேண்டும். – என்றார்.

# சுற்றாடல் முன்னோடி ஜனாதிபதி பதக்க பரீட்சிப்பு முடிவு – 2022



மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ் மாவட்ட அலுவலகத்தில் கடந்த ஒக்ரோபர் 31 மற்றும் நவம்பர் முதலாம் திகதிகளில் நடத்தப்பட்ட ஜனாதிபதி பதக்க பரீட்சிப்பில் 8 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

சுற்றாடல் நேயமிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்கி சுற்றாடல் முகாமைத்துவத்தில் முன்னோடிகளாக மாற்றுகின்ற முயற்சியாகக் கல்வி அமைச்சும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் ஒருங்கிணைந்து சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தை நாடுபூராகவும் உள்ள பாடசாலை முறைமைக்குள் அமுலாக்கி வருகின்றன.



இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்கள் சுற்றாடல் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டு ஜனாதிபதி பதக்கத்தைப் பெற்றுக் கொள்வர். இப் பதக்கம் ஜனாதிபதியினால் நேரடியாக வழங்கப்படுகின்ற உயரிய பதக்கமாகும்.

மேற்படி பரீட்சிப்பில் மாவட்ட மட்டத்தில் சித்தியடைந்த 08 மாணவர்களின் விவரங்கள் வருமாறு:

செல்வி திவானி திருவரங்கன் (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), செல்வி டினிசியா வசந்தகுமாரன் (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), செல்வி மீனலோஜினி இராஜமோகன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), செல்வன் செல்வராசா ஷாருஜன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), செல்வி திருத்தகி ஜெயரட்ணம் (யா/அத்தியார் இந்துக்



கல்லூரி), செல்வி. குகப்பிரியா ரவீந்திரன் (யா/வேம்படி மகளிர் கல்லூரி), செல்வி கிருத்திகா மகேந்திரன் (யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்), செல்வி பானுஜா மந்திரமூர்த்தி (யா/இந்து மகளிர் கல்லூரி).

# களுபோவில போதனா வைத்தியசாலையின் 4 ஆவது மாடியிலிருந்து வீழ்ந்து நோயாளி பலி!

களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நோயாளி ஒருவர் நான்காவது மாடியிலிருந்து தவறி வீழ்ந்துஉயிரிழந்துள்ளார்எனகொஹுவல பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தேவத்தை, கோணபொல பகுதியைச்சேர்ந்த குருப்பு அச்சிகே சந்திரசோம (வயது – 65) என்பவரே இவ்வாறு தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று (புதன்கிழமை) அதிகாலை 5.30 மணியளவில் விடுதியில் உள்நோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்ட இடத்துக்கு உணவு உண்பதற்காக சென்று கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்

# சட்டவிரோதமாக சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று பேர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ்ப்பாணம், வயாவிளான் குட்டியப்புலம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று டிராக்டர்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன்,அவற்றின் சாரதிகள் மூவரும் கைது செய்யப்பட் டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவினருக்கு, கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது டிராக்டர் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், டிராக்டர்களும் சுண்ணாம்புக்கல்லுடன் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் அவர்களின் டிராக்டர்கள் மேலதிக நடவடிக்கைக்காக அச்சு வேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



# இலங்கையில் புதிய தலைமைத்துவமும் புதிய தத்துவமும் உருவாக வேண்டும்!

## சந்திரிக்கா திட்டவட்டம்

நாட்டை முன்னேற்ற இளைஞர்களின் தலைமைத்துவம் அவசியம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

குருணாகல் மாவட்ட மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

உலகில் ஊழல் நிறைந்த 10 நாடுகளில் இலங்கையும் ஒன்று. நாட்டை முன்னேற்ற இளைஞர்களின் தலைமை அவசியம். அரகலய என்ற போராட்டத்தால் செய்த புரட்சியை ஒரு போதும் மறக்க முடியாது.

இளைஞர் போராட்டம் இலங்கையில் ஒரு முக்கியமான மற்றும் மதிப்புமிக்க முன்னேற்றம், அத்துடன் ஒரு வரலாற்று நிகழ்வு. புரட்சியை ஏற்படுத்திய இந்த நிகழ்வை மக்கள் மத்தியில் இருந்து மறக்கடிக்க பலர் முயற்சிக்கின்றனர்.



70 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த அனைத்து கட்சிகளையும், 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மக்கள் நிராகரிக்கின்றனர்.

எனவே புதிய தலைமையும் புதிய தத்துவமும் வேண்டும். – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சிறுநீரகக் கடத்தல் தொடர்பில் 10 பேரிடம் வாக்குமூலம் பதிவு!

பொரளையிலுள்ள தனியார் வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சிறுநீரக கடத்தல் தொடர்பில் சுமார் பத்து பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சிறுநீரக கடத்தல் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பந்தப்பட்ட தனியார் வைத்தியசாலை நிர்வாகத்திடமும் எதிர்வரும் நாள்களில் வாக்குமூலங்களையும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் பதிவு செய்யவுள்ளனர்.

பொரளையிலுள்ள தனியார் வைத்திய சாலையொன்றில் இடம்பெற்றதாக கூறப்படும் சிறுநீரக கடத்தலுடன் தொடர்புடைய பிரதான தரகர் இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

41 வயதான குறித்த சந்தேக நபர், கொழும்பு 15, கஜீமாவத்தை பகுதியைச் சேர்ந்தவர் எனவும், சிறுநீரகப் பணத்தைக் கொடுக்கும் நபரையும், பெற்றுக்கொள்ளும் தரப்பையும் அவர் ஒருங்கிணைத்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், குறித்த தனியார் வைத்தியசாலையின் பிரதம வைத்திய அதிகாரி உட்பட 06 பணிப்பாளர்களுக்கு பயணத்தடையும் விதிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.12.2022இல் வெளியிடப்பெற்றது.